

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.5.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 30 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 11 முடிவுற்ற பணிகள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 188 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற பணிகள், நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 102 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் 19 முடிவுற்ற பணிகள், பேரூராட்சிகள் ஆணையரகத்தின் சார்பில் 77 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் 14 முடிவுற்ற பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் 60 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் 2 முடிவுற்ற கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 59 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப்பணிகள், நகராட்சி நிருவாகத் துறை சார்பில் 15 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப் பணிகள், பேரூராட்சிகள் ஆணையரகத்தின் சார்பில் 18 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.5.2025) தலைமைச் செயலகத்தில் எவரெஸ்ட் சிகரத்தில் 5,364 மீட்டர் உயரத்திற்கு மலையேற்றம் மேற்கொண்டு அடிவார முகாமை அடைந்த (Everest base camp) திருநெல்வேலியைச் சேர்ந்த பள்ளி மாணவி லலித் ரேணு ஸ்ரீதர் வெங்கடேஷ் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் மாணவியின் பெற்றோர் உடன் உள்ளனர்.




மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் வழக்கறிஞர் பி. வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்களை நேற்று முன்தினம் (29.05.2025 – வியாழக்கிழமை) சென்னை காயிதே மில்லத் மன்ஜிலில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். மாநில பொதுச்செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாநில துணைத்தலைவர் கே.டி. கிஸர் முஹம்மது, மாநில தலைமை நிலைய செயலாளர் கே.எம். நிஜாமுதீன், மாநில துணைச்செயலாளர் எஸ்.ஏ இப்ராஹிம் மக்கி, எம்.எஸ்.எப் தேசிய பொதுச்செயலாளர் எஸ்.எச். முஹம்மது அர்ஷத், எம்.எஸ்.எப் மாநில பொதுச்செயலாளர் வழக்கறிஞர் ஏ.ஆர்.ஆர். நூர்முஹம்மது, சென்னை வடக்கு மாவட்ட எஸ்.டி.யூ செயலாளர் ஏ.கே. முஹம்மது ரபீ ஆகியோர் உடனிருந்தனர்.

### மல்லியக்கரை – இராசிபுரம் – திருச்செங்கோடு – ஈரோடு சாலை –

# மதுரை பழங்காநத்தத்தில் ரயில்வே கடவிற்கு - சாலை மேம்பாலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மே 31-

நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.499.08 கோடி செலவில் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை - இராசிபுரம் - திருச்செங்கோடு - ஈரோடு சாலை, மதுரை மாவட்டம் - பழங்காநத்தத்தில் இரயில்வே கடவிற்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம், இராணிப்பேட்டை மாவட்டம், மேல்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள பழங்குடியினருக்கான மறுகுடியமர்வு குடியிருப்புகளை - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.5.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் 424 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை - இராசிபுரம் - திருச்செங்கோடு - ஈரோடு சாலை, மதுரை மாவட்டம், பழங்காநத்தத்தில் இரயில்வே கடவிற்கு மாற்றாக 68 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம், மேல்பாக்கத்தில் 6 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பழங்குடியினருக்கான மறுகுடியமர்வு குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

பொருளாதாரத்தின் அங்கங்களான விவசாயம், தொழில், வணிகம், சுற்றுலா போன்ற துறைகளின் மேம்பாட்டிற்கு சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற முக்கியப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், தமிழ்நாடு அரசு, நெடுஞ்சாலைத் துறை வாயிலாக தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை சிறந்த முறையில் உருவாக்கி, பராமரித்து வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டுகளில், 16,500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டு, 2,130 கி.மீ. முக்கியச் சாலைகள் நான்குவழி மற்றும் இருவழித்தட சாலைகளாக அகலப்படுத்தப்பட்டு, 5,000 கி.மீ.க்கும் அதிகமான ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மாவட்ட பிற சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், 1500-க்கும் அதிகமான பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டத்தில் மேம்படுத்தப்பட்ட நான்கு வழிச்சாலை திறந்து வைத்தல்

சென்னை கன்னியாகுமரி தொழில் தடத் திட்டத்தின் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியோடு, நில எடுப்பு, குழாய்களை மாற்றியமைத்தல் மற்றும் பராமரிப்பு உட்பட 424 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில், நாமக்கல் மாவட்டத்தில், 11.15 கிலோ மீட்டர் நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை - இராசிபுரம் - திருச்செங்கோடு - ஈரோடு சாலை மற்றும் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை - இராசிபுரம் - திருச்செங்கோடு - ஈரோடு சாலையில், பள்ளிப்பாளையம் நகரின் நெரிசலை குறைத்திடும் வகையில் 3.40 கி.மீ அமைக்கப்பட்டுள்ள இருவழித்தட உயர்மட்ட பாலம் ஆகியவற்றை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பள்ளி கல்லூரிகளுக்கு மாணவ - மாணவியர்கள் விரைவாக சென்று வரவும், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டத்தை இணைக்கும் வகையிலும், இப்பகுதியின் தொழில் வளர்ச்சிக்கும் அருகிலுள்ள நகர்புறங்களில் அமைந்துள்ள பிற பகுதிகளுக்கு பொதுமக்கள் எளிதாக செல்லவும் இச்சாலையானது வழிவகுக்கிறது. இத்திட்டத்தில், சாலைப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் தெருவிளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, 7 ஆண்டுகளுக்கான செயல்திறன் அடிப்படையிலான பராமரிப்புப் பணியும் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

மதுரை மாவட்டம் - பழங்காநத்தத்தில் இரயில்வே கடவிற்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்

மதுரை மாவட்டத்தில் மதுரை - கன்னியாகுமரி சாலையில் பழங்காநத்தத்தில், மதுரை சந்திப்பு மற்றும் திருப்பரங்குன்றம் இரயில்வே நிலையங்களுக்கிடையே இரயில்வே கடவு எண் 366-க்கு மாற்றாக

68 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் 730 மீட்டர் நீளத்திற்கு கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மதுரை மாநகரின் மேற்கு பகுதிகளான பழங்காநத்தம், திருப்பரங்குன்றம் மற்றும் காளவாசல் பகுதிகளை மதுரை மாநகரின் கிழக்கு பகுதிகளான டிவிஎஸ் நகர், ஜெய்ஹிந்துபுரம், வில்லாபுரம், அவனியாபுரம், விமான நிலையம் ஆகிய பகுதிகளை இப்பாலம் இணைப்பதால் இப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறைவதுடன், இரயில்வே கடவில் காத்திருக்காமல், கால தாமதமின்றி பயணிக்க இயலும்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் பழங்குடியினரின் மறுகுடியமர்வுக்காக கட்டப்பட்ட குடியிருப்புகளை திறந்து வைத்தல்

இராணிப்பேட்டை மாவட்டம், மேல்பாக்கம் கிராமத்தில் அரக்கோணம் புறவழிச்சாலை அமைக்கும் நேர்பாட்டில் நிலஎடுப்பில் பாதிக்கப்பட்ட

41 இருளர் பழங்குடி குடும்பங்களுக்கு மறுகுடியமர்வு மற்றும் மேம்பாட்டிற்காக 6 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட குடியிருப்புகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பழங்குடியின மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கினார்.

இந்த மறுகுடியமர்வு திட்டத்தில் 41 குடியிருப்புகள், அங்கன்வாடி மையம், சமுதாயகூடம், கோவில், மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி, சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டு திடல், குடிநீர் மற்றும் மின்சாரம் வசதி போன்ற அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், சுகாதாரமான சூழல், சமூக நிலைத்தன்மை மற்றும் சீரான வாழக்கை முறையை அம்மக்கள் அடைவர்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப் பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் மரு. ஆர்.செல்வராஜ், சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட இயக்குநர்தெ. பாஸ்கர பாண்டியன், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் இரா. செல்வதுரை, நபார்டு மற்றும் கிராம சாலைகள் தலைமை பொறியாளர் ப.செந்தில் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை தொகுதியில்

# ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட ‘மக்களுடன் முதல்வர்’ முகாம்!

## அமைச்சர்கள் கோவி.செழியன் - சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தனர்! நிவேதா என்.முருகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, மே 31–

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை உயர் கல்வி துறை அமைச்சர் கோவி. செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து, பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட கோரிக்கை மனுக்களுக்குரிய பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பட்டமங்கலம்;, வெள்ளாலகரம்;, காளி, திருச்சிற்றம்பலம்;, வரதம்பட்டு ஆகிய வருவாய் கிராமங்களில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்கள் நடைபெற்றது முகாம்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். ஸ்ரீகாந்த்தலைமை தாங்கினார், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் உயர்கல்வி துறை அமைச்சர் மகோவி செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து, பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட கோரிக்கை மனுக்களுக்குரிய பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், உயர்கல்வி துறை அமைச்சர் கோவி.செழியன் பேசுகையில், மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் 5 இடங்களில் மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் முகாம் நடைபெற்று, அதற்கு நலத்திட்ட உதவிகளும் வழங்குகிறோம்;. அதோடு மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு மகத்தான திட்டம் தான் இந்த மக்களுடன் முதல்வர் திட்டம். 15 துறைகளிலிருந்து 48 சேவைகள் வழங்கப்படுகிறது. முதல் கட்டம் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளிலும், இரண்டாவது கட்டம், ஊராட்சி பகுதிகளிலும்;; நடத்தப்பட்டது. இந்த 2 கட்ட முகாம்களில் பெறப்பட்ட மனுக்களில் ஏறத்தாழ 80 சதவீதம் மனுக்களுக்கு உரிய தீர்வை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். மக்கள் அரசாங்கத்தைத் தேடி செல்லும் நிலை மாறி, மக்களைத்தேடி அரசாங்கம் செல்லும் ஒரே திட்டம் இந்த மக்களுடன் முதல்வர் திட்டம். விளிம்பு நிலையில் உள்ள மக்கள், ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், கூலி வேலைக்கு செல்பவர்கள், போன்ற அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மக்கள் இருக்கும் இடங்களுக்கு செல்ல வேண்டும் என்ற நோக்கில் அந்தந்த கிராமங்களில் அதன் சுற்றுவட்டார பகுதியில் இந்த மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் முகாம் நடத்தப்படுகின்றது. இந்த முகாமை அனைத்துத்தரப்பு மக்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் முகாம் போன வாரம் நடத்தப்பட்டபோது, 9 மணிக்கு மனுக்களை வாங்கி 11 மணிக்கெல்லாம் அதற்கான உரிய தீர்வை கண்டுள்ளோம். அதேபோல் இன்றும், மற்ற மாவட்டங்களை விட மயிலாடுதுறை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மாற்றுத்திறனாளிகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்ற நோக்கில் ஊராட்சி மன்றம், பேரூராட்சி மன்றம்;, ஊராட்சி ஒன்றியம், மாநகராட்சி ஒன்றியம், நகராட்சி ஒன்றியம் எந்தெந்த பொது அமைப்பு இருக்கின்றதோ அங்கெல்லாம் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று அவர்களுக்கு நாற்காலிபோட்டு சபையில் அமர செய்தவர். 17 இலட்சம் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு காலை உணவு திட்டத்தை தந்தவர். பெண்களுக்கான விடியல் பேருந்து திட்டம், 1 கோடியே 14 இலட்சம் குடும்ப தலைவிகளுக்கு மகளிர் உரிமைத்தி;ட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண் திட்டம், மக்களுடன் முதல்வர், மக்களைத்தேடி மருத்துவம் போன்ற சிறப்பான திட்டங்களைத் தந்தவர். கலைஞரின் கனவு இல்லம் தந்தவர். போன்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தந்த ஒரே முதலமைச்சர் நமது முதலமைச்சர் அவர்கள் என இவ்வாறு உயர்கல்வி துறை அமைச்சர் கோவி.செழியன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசுகையில், மயிலாடு துறை ஒன்றியத்தில் இருக்கக்கூடிய கிராமங்களில் சிறப்பு கவனம் எடுத்து அனைத்து சாலைகளையும் சீரமைத்துத்தர வேண்டும் என்று அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோல, பொது மக்களின் கோரிக்கையாக புறவழிச்சாலை திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நமது முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று, அப்பணிகளும்; தொடங்க இருக்கின்றது. மன்னம்பந்தல் வழியாக அந்த புறவழிச்சாலை அமைய இருக்கின்றது. மயிலாடுதுறை மாவட்டத்தில், நகர்பகுதியில் இருக்கின்ற மக்களுக்காக பாதாள சாக்கடை திட்டம் விரிவுபடுத்துவதற்காக ரூ.53 கோடி மதிப்பில் பல்வேறு பணிகளுக்காக அரசாணைகள் வழங்கப்பட்டு, அதுவும் தொடங்க உள்ளது. இப்படி பல்வேறு பணிகள் இந்த மாவட்டத்தில் நடைபெற உள்ளது. இந்தியாவிலேயே இப்படி இந்த மகத்தான திட்டத்தை தந்த ஒரே முதலமைச்சர் நமது முதலமைச்சர் அவர்கள். ஏழை, எளிய மக்கள் கல்வியில், பொருளாதாரத்தில் உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் இந்த மகத்தான திட்டத்தை தந்தவர். வரலாற்றில் இந்த 4 ஆண்டு காலத்தில், ஒரு காலத்தில் நகர்புறங்களுக்கு தான் சென்று படிக்க முடியும் என்ற நிலையை மாற்றி, ஒவ்வொரு கிராமங்களிலும் இன்று 37 கலை அறிவியல் கல்லூரிகளை உருவாக்கி நம் பிள்ளைகளுக்கு உயர்கல்வியை தந்தவர். நேற்றைய தினம், 11 கலை அறிவியல் கல்லூரிகள் நமது முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. 15 தினங்களுக்குள் அரசாணை வெளியிடப்பட்டு, பிள்ளைகளின் படிப்பிற்கும், எளிய மக்களின் வாழ்வு உயர்வதற்காக கல்வி ஒன்றே மிகச்சிறந்த இலக்கு என்று கருதி வழிநடத்தி வருபவர் நம் முதலமைச்சர் அவர்கள் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

முன்னதாக, மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பட்டமங்கலம்;, வெள்ளாலகரம்;, காளி, திருச்சிற்றம்பலம்;, வரதம்பட்டு ஆகிய வருவாய் கிராமங்களில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் வேளாண்மைத்துறை சார்பில் பாரம்பரிய விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 3 குழுவிற்கு தலா ரூ.40 ஆயிரம் மதிப்பில் மானியத்துடன் கூடிய எண்ணெய் பிழியும் இயந்திரம் மற்றும் பேக்கிங் இயந்திரமும்;, 15 பயனாளிகளுக்கு தொழிலாளர் நலவாரிய அட்டைகளையும், 10 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்ட அட்டையையும், 10 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகையும், கூட்டுறவுத்துறை மூலம் 2 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் பயிர்கடனும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை சார்பில் ஒரு பயனாளிக்கு ரூ.40 ஆயிரம் மதிப்பில் சிறுபான்மை வகுப்பினர் மேம்பாட்டுக் கடனும், 1 பயனாளிக்கு மறுவாழ்வு நிதியையும் உயர்கல்வி துறை அமைச்சர் கோவி. செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில்மாநில மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள். கலந்து கொண்டனர்



திருப்பூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதில் திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டிகேடி மு.நாகராசன் உள்பட மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், சட்டமன்ற பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், சேந்தாக்குடி ஊராட்சி, கீழையூர் கிராமத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.14 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடத்தினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்.